**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 6.**

**ந.க.எண்.62448/சி2/இ1/2021, நாள்.13.04.2022.**

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி – அரசு மற்றும் நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்கள் – பதவி உயர்வின் மூலம் நிரப்புதல் – 01.01.2022 தேதியில் உள்ளவாறு தகுதி வாய்ந்த இடைநிலை , உடற்கல்வி மற்றும் சிறப்பாசிரியர்கள் - முன்னுரிமை பட்டியல் தயார் செய்தல் – விவரங்கள் கோருதல் – சார்பு.

பார்வை: 1) அரசாணை (நிலை) எண்.13, பள்ளிக் கல்வித் துறை நாள் 30.01.2020-ன்படி அரசிதழில் (எண்.36, நாள் 30.01.2020) வெளியிடப்பட்டுள்ள Re-issuance of Rules.

*****

அரசு மற்றும் நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்துப் பாடங்கள் – தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல்) பதவிக்கு பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்ய ஏதுவாக, முன்னுரிமைப் பட்டியல தயார் செய்யும் பொருட்டு 01.01.2022 தேதியில் உள்ளவாறு தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் விவரப் பட்டியலை தயார் செய்து கீழ்க்காணும் அறிவுரைகளை சிறிதும் வழுவாமல் பின்பற்றி இதனடியிற் மாவட்ட வாரியாக குறிப்பிட்டுள்ள தேதிகளின்படி, சம்பந்தப்பட்ட பிரிவு உதவியாளர், (அ) கண்காணிப்பாளர் மூலம் அனுப்பி வைக்கும்படி அனைத்து **முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

1) **அரசாணை (நிலை) எண்.13, பள்ளிக் கல்வித் துறை (ப.க.3(1)) நாள் 30.01.2020-ன்படியான விதித் திருத்தங்களின்படி (Rule Amendment, அரசிதழ் வெளியீடு எண்.36, நாள் 30.01.2020) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகளை கண்டிப்பாக (இணைப்பு-1-ல் குறிப்பிட்டுள்ளவாறு) பெற்றிருத்தல் வேண்டும்.**
2) **2021-22-ம் ஆண்டிற்கான உத்தேச காலிப்பணியிடங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில், பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக் கேற்ப பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கான முன்னுரிமைப் பட்டியல் / தேர்ந்தோர் பெயர் பட்டியல் (Seniority List / Panel List) தயார் செய்ய வேண்டியுள்ளதால், கீழ்க்காணும் விவரப்படி, பாடவாரியாக நியமனம் பெற்ற தகுதியான இடைநிலை ஆசிரியர் / உடற்கல்வி ஆசிரியர் / ஓவியம், தையல், இசை உள்ளிட்ட சிறப்பாசிரியர்கள் சார்பில் விவரங்களை பெற்றனுப்ப வேண்டும்.**

| வ.எண். | பாடம் | விவரம் |
|---|---|---|
| (i) | தமிழ் | 31.12.2000 வரை நியமனம் பெற்று பணிபுரிந்து வருபவர்கள் |
| (ii) | ஆங்கிலம் / கணிதம் / அறிவியல் | 01.01.2022 தேதியில் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு தகுதி பெற்றவர்கள் |
| (iii) | சமூக அறிவியல் | <u>வரலாறு பாடம்</u> : 31.12.2000 வரை நியமனம் பெற்று பணிபுரிந்து வருபவர்கள்<br><u>புவியியல் பாடம்</u> : 31.12.2014 வரை நியமனம் பெற்று பணிபுரிந்து வருபவர்கள். |

...2.

3) ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 1995-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் சார்ந்த விவரங்களை அளிக்கும் போது அவர்கள் தேர்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் தவறாமல் குறிப்பிட வேண்டும். (நியமன ஆணையின் நகல், படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

4) ஒப்பந்த அடிப்படையில் தொகுதிப்பூதியத்தில் நியமிக்கப்பட்டு, பின்னர் 01.09.1992 / 01.06.2006-ல் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஆசிரியர்களது பணிவரன்முறை செய்யப்பட்ட நாளினை அடிப்படையாகக் கொண்டு (01.09.1992 / 01.06.2006) பட்டியலில் சேர்க்கப்படும் போது, சார்ந்த இடைநிலை / உடற்கல்வி / சிறப்பு ஆசிரியர்கள் முதன் முதலில் நியமனம் செய்யப்பட்ட நாள் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட வேண்டும். இதனை பணிப்பதிவேட்டை சரிபார்த்து பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்கான பணிப்பதிவேட்டின் பக்க நகல் இணைக்கப்பட வேண்டும்.

5) நகராட்சிப் பள்ளிகளில் 01.06.1986-க்கு முன்னர் நகராட்சி ஆணையரால் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்களின் பெயர்கள் பட்டியலில் இடம் பெறுதல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர்கள் சார்ந்த விவரங்களை தனியாக பட்டியலிட்டு ஒப்படைத்தல் வேண்டும்.

6) பட்டதாரி ஆசிரியர் (தமிழ் வழி / சிறுபான்மை மொழி வழி – அனைத்துப் பாடங்கள்) இளங்கலைப் பட்டம் பெற்றிருப்பின் அத்தகைய ஆசிரியர்கள் அனைவரின் விவரங்களும் சிறுபான்மை மொழி வாரியாகத் தனித் தனியே பட்டியலிட்டு அனுப்ப வேண்டும். (மேற்படி ஆசியர்கள் தமிழ் மொழித் தேர்வு பகுதி-2 தேர்ச்சி பெற்ற விவரங்களுடன் கருத்துருக்கள் அனுப்பப்பட வேண்டும். சிறுபான்மை மொழி ஆசிரியர்களைப் பொறுத்தவரை உரிய காலத்திற்குள் தமிழ்மொழித் தேர்ச்சி பெறாதவர்களின் பெயர்களை இப்பட்டியலில் சேர்க்கக் கூடாது).

7) ஆசிரியர்களின் பிறந்த தேதி, நியமன முறை, கடந்த ஐந்தாண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விவரம் போன்றவற்றை உறுதி செய்து சரியாக அளித்திடல் வேண்டும்.

8) வெளி மாநிலச் சான்றிதழ் எனில் மதிப்பீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

9) ஓராண்டு முறையில் இரட்டைப் பட்டம் (Double Degree) பெற்றவர்கள் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.A.No.259/2013-ல் 05.02.2014-ம் நாளிட்ட தீர்ப்பில் ஓராண்டு முறையில் இரட்டைப்பட்டம் பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தகுதியில்லை எனத் தெரிவித்திருப்பதால், தற்போது பட்டியலில் அவ்வாறு பயன்றவர்களின் விவரங்கள் இடம் பெறக் கூடாது.

10) அரசாணை எண்.165, பள்ளிக் கல்வித் துறை நாள் 15.10.2014-ன்படி இரண்டாண்டு ஆசிரியர் பட்டய பயிற்சி சான்றினை (D.T.Ed.,) மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாகக் கருதி ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் அதன்படி தகுதி பெற்றவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

11) அரசாணை எண்.95, பள்ளிக் கல்வித் துறை நாள் 05.05.2015-ன்படி 20.05.2002-க்கு முன்னர் எஸ்.எஸ்.எல்.சி (பத்தாம் வகுப்பு) கல்வித் தகுதியுடன் தொழிற்கல்வி மேல்நிலை சான்றுக்குப் (Hr.Gr.) பின் பெறப்பட்ட தொழிற்கல்வி ஆசிரியர் சான்றினை (TTC) மேல்நிலைக் கல்விக்கு (+2 தேர்ச்சிக்கு) இணையாகக் கருதி ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் அதன்படி தகுதி பெற்றவர்கள் இருப்பின் அவர்களது பெயர்களையும் பட்டியலில் சேர்த்திட வேண்டும்.

...3,

12) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1-ல் சம்பந்தப்பட்ட ஆசிரியரின் விவரங்கள் (A4 அளவுள்ள தாளில்) தட்டச்சு செய்யப்பட்டு, உரிய நியமன / பணிவரன்முறை/ தகுதிகாண் பருவம் முடித்த ஆணை நகல்கள் / பொது தொழிற் கல்வி சான்றுகளின் நகல்கள் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரால் மட்டுமே சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும். படிவம் 1-ல் சார்ந்த ஆசிரியர் / தலைமை ஆசிரியர் கையொப்பத்துடன் முதன்மைக் கல்வி அலுவலர் மேலொப்பமிட்டிருக்க வேண்டும்.

13) படிவம் - 2-ல் மாவட்ட அளவிலான தொகுப்பறிக்கை (Consolidated statement) ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் (சமூக அறிவியல் பாடத்திற்கு வரலாறு பட்டம் பெற்றவர்கட்கு தனியாகவும், புவியியல் பட்டம் பெற்றவர்கட்கு தனியாகவும்) தமிழ் வழி மற்றும் சிறுபான்மை மொழி வழி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தயார் செய்து, **"மாவட்டத்தில், 01.01.2022 நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர் (பாடத்தை குறிப்பிடவும்) பதவி உயர்வுக்கு தகுதியான இடைநிலை / உடற்கல்வி மற்றும் சிறப்பாசிரியர்கள் எவரது பெயரும் விடுபடவில்லை"** என்ற சான்றுடன் ஒப்படைக்க வேண்டும்.

இப்பொருளில் தனிக் கவனம் செலுத்தி, மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி அனைத்து தகுதியுள்ள ஆசிரியர்களின் விவரப்பட்டியலை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஆங்கிலத்தில் எந்த ஒரு கலமும் விடுபடாமல் Excel (Arial -Font)-ல் தயாரித்து குறுந்தகட்டில் (CD - Subject wise) பதிவு செய்து, அச்சு நகல் ஒன்றினையும், விவரங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்றினையும் கீழ்க்காணும் விவரப்படி நேரில் சமர்ப்பிக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கட்கும் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | மாவட்டம் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதி | சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரிவுகள் (பாடவாரியாக) - பாடம் | பிரிவு |
|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி, சிவகங்கை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் | 27.04.2022 | தமிழ் மற்றும் சிறுபான்மை மொழிப் பாடங்கள் | சி - 5 |
| 2. | ஈரோடு, கரூர், நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி | 28.04.2022 | ஆங்கிலம் மற்றும் கணிதம் (சிறுபான்மை மொழி வழி உட்பட) | சி - 3 |
| 3. | தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், நாகை, திருவாரூர், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை | 29.04.2022 | அறிவியல் மற்றும் சமூக அறிவியல் (சிறுபான்மை மொழி வழி உட்பட) | சி - 2 |
| 4. | வேலூர், திருப்பத்தூர் திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை | 30.04.2022 | | |

மேலும், இப்பட்டியலில் பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து எந்த ஆசிரியரிடமிருந்தாவது முறையீடு ஏதும் பின்னர் வரப்பெற்றால் அதற்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு** – படிவம் 1 மற்றும் 2.

**பள்ளிக் கல்வி இணை இயக்குநர்,**
**(பணியாளர் தொகுதி)**

13-04-22.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
(மின்னஞ்சல் மூலமாக)

நகல் - இவ்வலுவலக சி-3 மற்றும் சி-5 பிரிவுகளுக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு.
(பகிர்மான எண்ணிட்டு)

இணைப்பு - 1

Section : 48 - Tamil Nadu School Education Subordinate Service Special Rules.

அரசாணை எண்.13, பள்ளிக் கல்வித் (பக3(1)) துறை நாள் 30.01.2020-ன்படி (அரசிதழ் வெளியீடு எண்.36, நாள் 30.01.2020) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகள்.

| Name of the Class (1) | Name of the Category (2) | Method of appointment (3) | Qualifications (4) |
|---|---|---|---|
| I | Graduate Teachers (Subjects) | Direct Recruitment promotion and recruitment by transfer | (i) Graduation and 2-year Diploma in Elementary Education (by whatever name known); or<br>(ii) Graduation with at least 50% marks and Bachelor in Education (B.Ed.); or<br>(iii) Graduation with at least 45% marks and Bachelor in Education (B.Ed.) in accordance with the National Council for Teacher Education (Recognition Norms and Procedure) Regulations issued from time to time in this regard; or<br>(iv) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year Bachelor in Elementary Education (B.El.Ed.); or<br>(v) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year B.A., /B.Sc.Ed., or B.A.Ed./B.Sc.Ed.; or<br>(vi) Graduation with at least 50% marks and B.Ed., (Special Education);<br>and<br>must have obtained a degree or its equivalent with such subjects or languages in respect of which recruitment is made;<br>and<br>Pass in Teacher Eligibility Test (TET) for direct recruitment:<br>Provided that the candidates possessing the educational qualifications prescribed in (i), (iv) and (vi) above shall be eligible for appointment as Graduate Teacher (Subjects) to Classes VI to VIII:<br>Provided further that a pension with B.Ed. (Special Education) qualification shall undergo after appointment an National Council for Teacher Education recognized 6 month special Programme in Elementary Education. |
| II | Graduate Teachers (Tamil) | Direct Recruitment promotion and recruitment by transfer | (i) Graduation and 2-year Diploma in Elementary Education (by whatever name known); or<br>(ii) Graduation with at least 50% marks and Bachelor in Education (B.Ed.); or |

. . . . 6.

(iii) Graduation with at least 45% marks and Bachelor in Education (B.Ed.) in accordance with the National Council for Teacher Education (Recognition Norms and Procedure) Regulations issued from time to time in this regard; or

(iv) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year Bachelor in Elementary Education (B.El.Ed.); or

(v) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year B.A., /B.Sc.Ed., or B.A.Ed./B.Sc.Ed.; or

(vi) Graduation with at least 50% marks and B.Ed., (Special Education);

and

must have obtained a degree or its equivalent with such subjects or languages in respect of which recruitment is made;

and

Pass in Teacher Eligibility Test (TET) for direct recruitment:

Provided that the candidates possessing the educational qualifications prescribed in (i), (iv) and (vi) above shall be eligible for appointment as Graduate Teacher (Tamil) to Classes VI to VIII:

Provided further that a pension with B.Ed. (Special Education) qualification shall undergo after appointment an National Council for Teacher Education recognized 6 month special Programme in Elementary Education.

| | | | |
|---|---|---|---|
| III | Graduate Teachers (English) | Direct Recruitment promotion and recruitment by transfer | (i) Graduation and 2-year Diploma in Elementary Education (by whatever name known); or<br>(ii) Graduation with at least 50% marks and Bachelor in Education (B.Ed.); or<br>(iii) Graduation with at least 45% marks and Bachelor in Education (B.Ed.) in accordance with the National Council for Teacher Education (Recognition Norms and Procedure) Regulations issued from time to time in this regard; or<br>(iv) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year Bachelor in Elementary Education (B.El.Ed.); or<br>(v) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year B.A., /B.Sc.Ed., or B.A.Ed./B.Sc.Ed.; or<br>(vi) Graduation with at least 50% marks and B.Ed., (Special Education);<br>and |

| | | | |
|---|---|---|---|
| | | | must have obtained a degree or its equivalent with such subjects or languages in respect of which recruitment is made;<br>and<br>Pass in Teacher Eligibility Test (TET) for direct recruitment:<br><br>Provided that the candidates possessing the educational qualifications prescribed in (i), (iv) and (vi) above shall be eligible for appointment as Graduate Teacher (English) to Classes VI to VIII:<br><br>Provided further that a pension with B.Ed. (Special Education) qualification shall undergo after appointment an National Council for Teacher Education recognized 6 month special Programme in Elementary Education. |
| IV | Graduate Teachers (Languages other than Tamil and English) | Direct Recruitment promotion and recruitment by transfer | (i) Graduation and 2-year Diploma in Elementary Education (by whatever name known); or<br>(ii) Graduation with at least 50% marks and Bachelor in Education (B.Ed.); or<br>(iii) Graduation with at least 45% marks and Bachelor in Education (B.Ed.) in accordance with the National Council for Teacher Education (Recognition Norms and Procedure) Regulations issued from time to time in this regard; or<br>(iv) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year Bachelor in Elementary Education (B.El.Ed.); or<br>(v) Higher Secondary (or its equivalent) with at least 50% marks and 4-year B.A., /B.Sc.Ed., or B.A.Ed./B.Sc.Ed.; or<br>(vi) Graduation with at least 50% marks and B.Ed., (Special Education);<br>and<br>must have obtained a degree or its equivalent with such subjects or languages in respect of which recruitment is made;<br>and<br>Pass in Teacher Eligibility Test (TET) for direct recruitment:<br><br>Provided that the candidates possessing the educational qualifications prescribed in (i), (iv) and (vi) above shall be eligible for appointment as Graduate Teacher (Languages other than Tamil and English) to Classes VI to VIII:<br><br>Provided further that a pension with B.Ed. (Special Education) qualification shall undergo after appointment an National Council for Teacher Education recognized 6 month special Programme in Elementary Education. |

படிவம்

01.01.2022 -ல் உள்ளவாறு பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதி பெற்ற இடைநிலை ஆசிரியர்/ உடற்கல்வி ஆசிரியர்/ஓவியம்/ தையல்/ இசை ஆசிரியர்கள் முன்னுரிமைப்பட்டியல் (அரசாணை (நிலை)எண்.13, பள்ளிக்கல்வித்(பக.3(1) )துறை, நாள்.30.01.2020 -ன் படி தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி விதித்திருத்தத்தின்படி பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட கல்வித்தகுதியின் அடிப்படையில் திருத்திய படிவம்

| வ.எண். | பொருள் | விவரம் |
|---|---|---|
| 1 | இடைநிலை ஆசிரியர்/ உடற்கல்வி ஆசிரியர்/ஓவியம்/தையல்/இசை ஆசிரியர் பெயர் | |
| 2 | EMIS ID No | |
| 3 | பள்ளியின் பெயர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் | |
| 4 | பள்ளியின் UDISE எண் | |
| 5 | பிறந்த தேதி | |
| 6 | பணி நியமனம் பெற்ற பதவியின் பெயர் | |
| 7 | பணிநியமன முறை (Employement Exchange / TRB /Compassionate Grounds) | |
| 8 | தர எண் (TRB/ TNPSC Rank Number) | |
| 9 | வருடம் | |
| 10 | தற்போது வகிக்கும் பதவியில் பணியில் சேர்ந்த நாள் (தொகுப்பூதியம் / முறையான ஊதிய விகிதத்தில் என்பதை குறிப்பிடவும்) | |
| 11 | தற்போது வகிக்கும் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (ஆணை எண் மற்றும் நாள்) | |
| 12 | தற்போது வகிக்கும் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் (ஆணை எண் மற்றும் நாள்) | |
| 13 | வேறு அலகு / துறையில் இருந்து மாறுதல் பெற்றிருந்தால் பள்ளிக்கல்வித்துறையில் பணியில் சேர்ந்த நாள் | |
| 14 | i) எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி மாதம் வருடம்<br>ii) மேல்நிலை வகுப்பு மாதம் வருடம் அல்லது<br>iii) இடைநிலை ஆசிரியர் பயிற்சி (SGTT /DTED/TTC) தேர்ச்சி பெற்ற மாதம் , வருடம் | |
| 15 | இளங்கலை பட்டப்படிப்பு (B.Lit./ B.A. / B.Sc.) | |
| | அ) முதன்மைப் பாடம் | |
| | ஆ) தேர்ச்சி பெற்ற மாதம் / வருடம் | |
| | இ) பல்கலைக் கழகத்தின் பெயர் | |
| | ஈ) கல்வியாண்டு | |
| | உ) மொத்த மதிப்பெண்கள் சதவீதம் | |
| 16 | தொழிற்கல்வி தகுதி (பி.எட் / எம்.எட்) | |
| | அ) தேர்ச்சி பெற்ற மாதம் / வருடம் | |
| | ஆ) பல்கலைக் கழகத்தின் பெயர் | |
| | இ) கல்வியாண்டு | |
| | ஈ) வேறு மாநிலத்தில் கல்வி பயின்றிருந்தால் சான்றிதழ் மதிப்பீடு செய்யப்பட்டதா? இல்லையா? | |
| 17 | தாய்மொழி | |
| 18 | தாய் மொழி தமிழ் அல்லாமல் பிற மொழியாக இருந்தால், தமிழ் மொழிப்பாடம் பகுதி-1 பயின்றீரா?, இல்லையெனில் தகுதிக்கான பிற தேர்வு தேர்ச்சி விவரம் | |
| 19 | கடந்த ஐந்து வருடங்களில் தண்டனை வழங்கப்பட்டதா? ஆம் எனில் விவரம் | |
| 20 | துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் | |
| 21 | பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரை | |

சம்மந்தப்பட்ட ஆசிரியரின் கையொப்பம்

தலைமையாசிரியரின் கையொப்பம்

முதன்மைக்கல்வி அலுவலரின் மேற்கையொப்பம்

Format

**Details of the SG Assistant / PET/Art/Music/Sweing Teachers who have eligible to promote as BT Assistant Post as on 01.01.2022**
**(All Subjects & Minority languages)**

| Name of the Teacher | EMIS ID No | Name of the School Place and District with Pincode | School UDISE Code | Date of Birth | Designation in which originally appointed | Mode of Appointment Special Recruitment / TRB / | Rank No if any | Year | Date of Appointment SGT/ PET/Drawing/Music /Sweing Teacher | Date of Regularisation in present post no and date | Date of Completion of Probation in the present Post | If the SGT/ PET/Drawing/Music /Sweing Teacher from other unit Department Date of joining in Government School. | S S L C Month and year H S C Month and Year (Or) SGTT/DTEd | U G Qualification B Lit /B A/ B Sc . | | | | Professional Qualification (B Ed ) | | | | If the Teacher Studied in other State Whether the Cerficate Evaluated or Not | Mother Tougue | If Mother Tongue is other than Tamil Whether studied Tamil Language as Part I If No Specify the Qualifying Test Passed | If any Punishment given for the past 5 years (YES,NO) If Yes Give Details | If any disciplinary action Pending (Yes, No) if Yes Give Details | Specific Remarks of the Head of Institution |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | Main Subject | Month & Year of Passing | Name of the University | Percentage of Marks in UG | Month & Year of Passing | Name of the University | Percentage of Marks in UG | Academic Year | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

**முதன்மைக் கல்வி அலுவலரின் சான்று :**

இம்மாவட்டத்தில் 01.01.2022 நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர் (________________________) பதவி உயர்வுக்கு தகுதியான இடைநிலை ஆசிரியர் / உடற்கல்வி ஆசிரியர் / ஓவியம் /

தையல் / இசை ஆசிரியர் உள்ளிட்ட எவரது பெயரும் விடுபடவில்லை என உறுதி அளிக்கிறேன்.